


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2024) சென்னை கிறித்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.சி.சி, – எம்.ஆர்.ஃஎப். இன்னோவேசன் பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், எம். ஆர். ஃஎப் நிறுவனத்தின் தலைவர் கே.எம். மேமன், துணைத் தலைவர் அருண் மேமன், சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பால் வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.12.2024) சென்னை கிறித்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.சி.சி. – எம்.ஆர்.ஃஎப் இன்னோவேசன் பூங்காவை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், எம்.ஆர். ஃஎப் நிறுவனத்தின் தலைவர் கே.எம். மேமன், துணைத் தலைவர் அருண் மேமன், சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பால் வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 45 ஆயிரம் சதுர அடியில் எம்.சி.சி.– ‘எம்.ஆர்.எஃப். இன்னோவேஷன் பார்க்’

# ‘ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம்’ எனும் முதலமைச்சரின் கனவுகளுக்கு வலுசேர்க்கும்!

## சென்னை, கிறித்துவக் கல்லூரியில் நடைபெற்ற தொடக்க விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, டிச. 15 -**

**சென்னை, கிறித்துவக் கல்லூரியில், எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் பங்களிப்புடன் எம்.சி.சி- ‘எம்.ஆர்.எஃப் இன்னோவேஷன் பார்க்’ (MCC - MRF Innovation Park) உருவாக்கப் பட்டுள்ளது.**

இந்திய ஒன்றியத்திலேயே 45 ஆயிரம் சதுர அடியில் ஒரு கலை & அறிவியல் கல்லூரியில் அமைக்கப்படும் மிகப்பெரிய `இன்னோவேஷன் பார்க்’ (Innovation Park) ஆக இந்த மையம் அமைந்துள்ளது. இதன் திறப்புவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு `இன்னோவேஷன் பார்க்’கைத் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது, ‘ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் முயற்சிகளுக்கு வலுசேர்க்கும் வகையில், இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெறுகிறபோதே வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலையை உருவாக்குபவர்களாக உயருவதற்கு வழி வகை செய்யும் வண்ணம் அமைந்துள்ளது” என்று அவர் குறிப்பிட்டார்.

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

இந்தக் கல்லூரி என் மனதுக்கு மிகவும் நெருக்கமான கல்லூரி. நான் அமெரிக்கா செல்லும் முன்பு, இங்குதான் ‘டோஃபெல்’ தேர்வு எழுதினேன். அதனால், மிகவும் பெருமிதத்துடன் இந்நிகழ்வில் நான் கலந்துகொள்கிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் இந்த பெருமைவாய்ந்த சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



**சென்னையின் தூண்களில் ஒன்று!**

சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னையின் தூண்களில் ஒன்று. ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களுக்கு கல்விச் சேவை புரிவதில் நீண்ட பாரம்பரியம் கொண்ட நிறுவனம் இது. இந்தக் கல்லூரி இன்னும் 12 ஆண்டுகளில் 200-வது ஆண்டு விழாவைக் காண இருக்கிறது. 200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குறிப்பிட்ட சிலர்தான் படிக்க முடியும் என்ற நிலையை, எல்லோரும் படிக்கலாம் என்று மாற்றியது, நம்முடைய சென்னை கிறித்துவ கல்லூரி. எண்ணிலடங்கா மாணவர்களின் வருங்காலத்தை வடிவமைத்ததில் இந்தக் கல்லூரிக்குப் பெரும் பங்குண்டு.

**வரவேற்கத்தக்கது!**

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டைஒருட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ‘ஸ்டார்ட் அப்’ தமிழ்நாடு, `கைடன்ஸ்’ தமிழ்நாடு, `ஃபேம்’ தமிழ்நாடு போன்ற திட்டங்கள் மூலம் புதுமை, தொழில்முனைவு ஆகியவற்றை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு. அந்தப் பயணத்தில் இந்த இன்னோவேஷன் பார்க்கை தொடங்கியிருப்பதன் மூலம் எம்.சி.சி.யும் எம்.ஆர்.எஃப் ஆகியவை கைகோர்த்திருப்பது வரவேற்கத்தக்கது.

45 ஆயிரம் சதுர அடியில் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புத்தாக்க மையம், நாட்டிலேயே கலைக் கல்லூரி ஒன்றில் தொடங்கப்பட்டுள்ள முதல் மையம் என்பதை, அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**புரட்சிகரமான சாதனை!**

இப்படிப்பட்ட மையங்கள் எல்லாம் முதல்தர நகரங்களில் அல்லது பொறியியல் கல்லூரிகள் அல்லது ஐ.ஐ.டி. போன்ற முதல்தர கல்வி நிறுவனங்களில்தான் இருக்கும் . ஆனால், இவற்றை கலைக் கல்லூரிகளிலும் தொடங்க முடியும் என்பதை, எம்.சி.சி நமக்கு வழிகாட்டி உள்ளது.

உண்மையில் இது ஒரு புரட்சிகர சாதனை. இதைச் சாத்தியப்படுத்திய அனைவருக்கும் என் வாழ்த்துகள். இங்குள்ள ஆய்வகங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன்.

கம்ப்யூட்டேஷனல் இன்ஃபோர்மாட்டிக்ஸ் லேப், சைக்கோ மெட்ரிக் லேப், டேட்டா அனலிடிக்ஸ் லேப், பிசினஸ் அனலிடிக்ஸ் லேப், ரைட்டர்ஸ் லேப் எனப் பல ஆய்வகங்கள் இங்கே உள்ளன.

இவை இங்கு பயிலும் மாணவர்களுக்குப் பல்வேறு துறை சார்ந்த திறன்களை, வளர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கும். இந்த மையம் தமிழ்நாட்டின் மகுடத்தில் இடம்பெறும் இன்னொரு மயிலிறகு. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வரும் ஆண்டுகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்களை, தமிழ்நாடு கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

**பொருளாதாரம் வளரும்!**

இந்த இன்னோவேஷன் பார்க் வெகுவிரைவில் நூற்றுக்கணக்கான ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதன் மூலம் நமது மாநிலத்தின் பொருளாதாரம் மட்டுமல்ல, நமது நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி பெறும். இந்த மையத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் வேலை பெறுபவர்களாக மட்டுமல்லாமல், வேலைகளை உருவாக்குபவர்களாகவும் உயர்வீர்கள்.

இந்த மையம் உங்களின் திறமைகள், சிந்தனைகள் மற்றும் வாய்ப்புகளை அதிகரித்து உங்கள் வருங்காலத்தையும் நமது மாநிலத்தின் வருங்காலத்தையும் வளமாக்கும்.

இந்த மையத்துக்கு ரூ.30 கோடி வழங்கி இருக்கும் எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் பெருந்தன்மையை நான் வாழ்த்துகிறேன். இப்படி ஒரு மையத்தை உருவாக்க முன் வந்த சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையம் நமது மாணவர்கள் மற்றும் நமது மாநிலத்தின் வருங்காலத்தின் மீது ஏற்படுத்த உள்ள மாற்றங்களை எதிர்நோக்கி இருப்போம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் தலைவர் கே.எம்.மேமன், துணைத் தலைவர் அருண் மேமன், நிர்வாக இயக்குநர் ராகுல் மேமன் மாப்பிள்ளை, சென்னை கிறித்துவ கல்லூரி முதல்வர் முனைவர் வில்சன், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஆலோசகர் டேவிதார் ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## கடலூர் மாவட்டம் – வீராணம் ஏரியின்

# நீர்வழித் தடங்களில் ஏற்பட்ட மழைப் பாதிப்புகள் ஆய்வு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் நேரில் பார்வையிட்டார்!

*கடலூர், டிச.15-*

*கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், வீராணம் ஏரியின் நீர்வழித்தடங்களில் ஏற்பட்ட மழைப்பாதிப்புகள் குறித்து லால்பேட்டை பகுதியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச் செல்வன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (13.12.2024) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*தொடர்ந்து, வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வீரானந்தபுரம் மற்றும் கண்டமங்கலம் பகுதியில் விளைநிலங்களில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.*

*ஆய்வின் போது வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில்,*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு கடலோர மாவட்டங்களில் கடும்மழைப்பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்ததை தொடர்ந்து சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடத்தி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டார்கள்.*

*அதனடிப்படையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வீராணம் ஏரி அருகே தாழ்வானப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் நிவாரண முகாம்களுக்கோ அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஒலிப்பெருக்கியின் வாயிலாக அறிவிக்கப்பட்டது.*

*வடகிழக்கு பருவமழை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக (12.12.2024 மற்றும் 13.12.2024) வீராணம் ஏரியின் நீர்பிடிப்பு பகுதிகளான காட்டுமன்னார்கோயில், ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், ஸ்ரீமுஷ்ணம் உள்ளிட்ட இடங்களில் சுமார் 41 செ.மீ அளவில் கனமழை பெய்துள்ளது. இதன் காரணமாக நீர்வரத்து திடீரென அதிகரித்துள்ளது. ஏற்கனவே, வடகிழக்கு பருவமழை முன்னிட்டு வீராணம் ஏரியிலிருந்து படிப்படியாக நீர் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், தற்போது பெய்த கனமழையின் காரணமாக கூடுதலான தண்ணீர் வந்தாலும், வீராணம் ஏரியில் அதன் முழுக்கொள்ளவு 47.5 அடியில் நேற்றைய தினம் 46.75 அடி உயரத்திற்கு எட்டியுள்ளது.*

*இதன் காரணமாக பாதுகாப்பு கருதி வீராணம் ஏரிக்கு அருகிலிருந்த குடியிருப்பு பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு முறையாக 6 முறை அறிவிப்பு வெளியிடப்பட்டு, வி.என்.எஸ் மற்றும் வெள்ளியங்கால் மதகுகளின் வழியாக பாதுகாப்பான முறையில் சிறிது சிறிதாக நீரின் அளவு உயர்த்தப்பட்டு 18,000 கனஅடி வெளியேற்றப்பட்டது.*

*மேலும், தொடர்மழையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும்பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வீராணம் ஏரியானது தினந்தோறும் அலுவலர்களால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, நீரின் அளவு குறைக்கப் பட்டுவருகிறது.*

*காட்டுமன்னார்கோயில் வட்டம், லால்பேட்டை பகுதியில் முறையான அறிவிப்பு தெரிவிக்கப்பட்டதன் வாயிலாக அனைத்து பொதுமக்களும் வெளியேற்றப்பட்டு, வெள்ளநீர் பாதுகாப்பான முறையில் வெள்ளியங்கால் ஓடை வழியாக வீராணம் ஏரியிலிருந்து வெளியேற்றப்பட்டு வருகிறது.*

*பெஞ்சல் மற்றும் தென்பெண்ணையாற்று வெள்ளப்பெருக்கின் காரணமாக சுமார் 3,59,315 ஹெக்டர் விளைநிலங்கள் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது. தற்போது மழைநீர் வடிந்த பிறகு சேதங்கள் குறித்து கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளப்படும்.*

*வீராணம் ஏரி அருகில் உள்ள பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியுள்ள இடங்களில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு 350 குடும்பங்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அங்கு 15,000 நபர்களுக்கு தேவையான உணவு வழங்கப்பட்டது.*

*மழைநீர் சூழ்ந்த பகுதிகளில் உடனடியாக தண்ணீரை வெளியேற்றி, மின்சாரம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்துதர சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.*

*இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.*

*ஆய்வின் போது மாவட்ட கண்காணிப்பு அலுவலர் இரா.இராஜாராம், செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) காந்தரூபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

---

## பி.பிரபாகரன் தலைமையில் - எஸ்.மதன்மோகன் வரவேற்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் பொதுக்கூட்டம்! 500 பேருக்கு நல உதவிகள்!

## தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு - சேலம் சுஜாதா - இம்ரான் சிறப்புரை!

*சென்னை, டிச. 15 -*

*சென்னை மேற்கு மாவட்டம் - சேப்பாக்கம் பகுதி 63 -வது வட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணிச் செயலாளர்,- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (15.12.2024 - ஞாயிறு) மாலை 6 மணிக்கு, புதுப்பேட்டை நாராயண நாய்ககர் தெருவில் 500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்திற்கு 63-வது வட்டச் செயலாளர் பி.பிரபாகரன் தலைமை தாங்குகிறார்.*

*பகுதிச் செயலாளரும் மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன்மோகன் வரவேற்கிறார். குலசைஆ. அனுமந்தன், நெல்லை பி.புகாரி, புல்லட் வி.ரமேஷ், பி.எஸ். ஸ்ரீதர், ஸ்ரீபிரியா பாண்டுரங்கன், எஸ்.ஏ. அமலநாதன், சி.செல்வராஜ், ஆர்.டி. வெங்கட், மா.சா.மணி, பி.சலாவுதீன், ஜெ.டி.தீபக், பி.நவீன்குமார், என்.கார்த்திக், எம்.. ரவிச்சந்திரன், எம்.சுமதி, மீனாட்சி சுந்தரம், வி.ரமணி, எஸ்.நிஷா, ஐ.ஜெகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி. மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழகப் பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, இம்ரான் ஆகியோர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.*

*இக்கூட்டத்தில் அர்.ஜெகதீசன், கே.மகேஷ், மு.சின்னராஜ், கே.கோபி, அ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், ஈஸ்வரி வெங்கடேசன், பி. ராஜேஷ், எஸ்.எச்.ரஹமத்துல்லா, ஜி.ராஜராஜன், பி. பாலசந்தர் மிக்ஸி அலிஃப், எம்.சி.பி. இளையராஜா, எஸ்.கே.ராஜ், மல்லி காபீ, வழக்கறிஞர் எஸ். சுகேந்திரன், வெ.தமிழன்பன், ஜெ.அருண் (எ) விஜய், ஜி.ஜெ.கிரிதரன்,என்.சுரேஷ், என்.குமரன், வி.ஜி. பாலாஜி, சி.சாய்குமார், சி.சாது, வி.கதிரவன், என்.தணிகாசலம், என்.செல்வம், எஸ்.எஸ். குமார், ஏ.ஜஹாங்கீர், சிவ ராஜ்,*

*நெல்லை நிசார், எஸ்.ராஜ்குமார், ஏ.எஸ்.சதாம் உசேன், ஏ.எஸ்.ஜாபர்அலி, ஜி.பிரவீன், எஸ்.ராஜ், கே.எம்.சமந்தன், பொன். கிருஷ்ணமூர்த்தி, ஜெ.அலாவுதீன், சி.வசந்த், கே.மகேஷ், ஹரிஸ், எஸ்.மகாலட்சுமி, கே.நாகரத்தினம், எஸ்.பி.அரி, ஏ.விஜயகுமார், எம்.சிவா, பி.தீபன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.*

*வட்ட துணைச் செயலாளர் எஸ்.நடராஜன் நன்றி கூறுகிறார்.*



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம் ஊத்துக்காடு ஊராட்சியில் கடும் மழையால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 80 இருளர் குடும்பத்தினருக்கு வி.சி.க. மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் திருமதி பொற்கொடி செல்வராஜ் ஏற்பாட்டில் அரிசி, மளிகை பொருட்கள், காய்கறிகளை, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர் கே தேவேந்திரன் துணைத் தலைவர் பி.சேகர், ஒன்றிய குழு உறுப்பினர் டி.சஞ்சய், காந்தி, வி.சி.க. நிர்வாகிகள் பாசறை செல்வராஜ், என்.ஜார்ஜ், வளவன், அசோக் குமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.